# வெற்றிக்கு வழி



## வெற்றிக்கு வழி அமைக்கும்

# நினைவாற்றல் உத்திகள்


தயாரிப்பு - ஆசிரியர்.பா. ஜான்லூயிஸ்

வெளியீடு - வெற்றிக்கு வழி குழுமம்



------ புத்தகங்கள் வாங்க ------

மின்னஞ்சல் : way2s100@gmail.com
தொடர்பு எண்கள் : 9787609090, 9787201010
இணையத்தளம் : www.bookade.com

இணையத்தளம் மூலமாக புத்தகம் வாங்க, **www.bookade.com**
இலவசப்பாட உதவிக்குறிப்பேடுகளுக்கு, **www.waytosuccess.org**
அஞ்சல் துறையின் **VPP** வசதி மூலம் புத்தகம் பெற, **9787104040** என்ற எண்ணுக்குக் குறுஞ்செய்தி அனுப்புங்கள்.



இந்நூலின் எந்தவொரு பகுதியையும் மின்னணுமுறையில் நகல் எடுத்து விற்பனை செய்தாலோ மறுஆக்கம் செய்தாலோ சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும்.

# முன்னுரை

**அன்பார்ந்த ஆசிரியர்களே! மாணவர்களே வணக்கம்!**

இன்று ஏடுதூக்கிப்பள்ளி செல்லும் நீங்களே நாளை அனைத்துத் துறைகளையும் ஆளப்போகின்றீர்கள்! உங்கள் கைகளில் தவழும் இந்த **'வெற்றிக்கு வழி அமைக்கும் நினைவாற்றல் உத்திகள்'** புத்தகம் குழந்தைகளின் நினைவுத்திறனை வளர்த்து தன்னம்பிக்கையை அதிகரிக்க மிகவும் பயனுள்ளதாக அமையும். இந்த புத்தகம் உருவாவதற்கு மூலகாரணமாக இருந்தவர் **ஆசிரியர்.பா.ஜான்லூயிஸ்** அவர்களுக்கு எமது சிறப்பான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம். இந்த புத்தகத்தைக் கணினியில் வடிவமைத்து அவ்வப்போது தேவையான மாற்றங்களைச்செய்து உதவுவதில் சிறப்பான பங்காற்றிய **திருமதி.அர்ச்சனா பிரவீன்குமார்** அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்குகின்றோம். வெற்றிக்கு வழி குழுமத்தின் நிறுவனர் **திரு.K.சின்னப்பன்** அவர்களுக்கும், வெற்றிக்கு வழி அறக்கட்டளையின் தலைவர் **திரு.V.சோமு** ஐயா அவர்களுக்கும் எங்களது சிறப்பான நன்றியை உரித்தாக்குகின்றோம். இறுதியாக உங்கள் கைகளில் இந்நூலைக் கொண்டுவந்து சேர்த்த எமது வெற்றிக்கு வழி குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறப்பான நன்றிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

**நன்றி**

**வாழ்த்தி மகிழ்வோர்,**
**வெற்றிக்கு வழி குழுமம்.**


| ------ பாடம் தொடர்பான விளக்கங்களைப் பெற ------ | |
|---|---|
| **மின்னஞ்சல்** | : wtsteam100@gmail.com |
| **தொடர்பு எண்** | : 7397774508 |
| **இணையத்தளம்** | : www.waytosuccess.org |
| இலவசப் பாட உதவிக் குறிப்பேடுகளுக்கு **www.waytosuccess.org** | |


புத்தகத்தை **VPP** மூலம் பெற விரும்புவோர் **'Memory Book – 1 Copy'** என்ற தகவலுடன் தங்கள் **அஞ்சல் முகவரியை 9787104040** என்ற எண்ணுக்கு **SMS** செய்யவும்.

சலுகை விலையில் மொத்தமாகப் பெற விரும்புவோர் **9787609090, 9787201010, 0431-2703031** ஆகிய எண்களையோ அல்லது பின்அட்டையில் உள்ள **மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்** எண்களையோ தொடர்புகொள்ளவும்.

# ஆசிரியர் முகப்புரை...

உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தன்மை உண்டு. பஞ்சுக்கு உறிஞ்சும் தன்மை உண்டு. வைரம் கடினமானது. யுரேனியம் கதிரியக்கம் கொண்டது. ஆர்செனிக் நச்சுத் தன்மை உடையது. அதுபோலவே ஒவ்வொரு குழந்தைக்கும் பிறவிக் குணம் என்று ஒன்று உண்டு. அந்தக் குணங்கள் அவரவர் முன்னோர்களின் வினைப் பயனால் மரபணுக்களின் வழியாக வருபவை.

**கல்வியில் தங்கள் குழந்தை சிறந்து விளங்க வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு பள்ளியும் அதன் ஆசிரியர்களும் விரும்பக் காரணம் என்ன?**

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

– [திருக்குறள் – 398]

ஒருவனுக்கு ஒரு பிறப்பில் கற்ற கல்வி அவனுக்கு மட்டுமல்லாமல் பின்வரும் ஏழு தலைமுறைக்கும் பாதுகாப்பாகும்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

– [திருக்குறள் – 400]

ஒருவனுக்கு எக்காலத்தும் எவ்விடத்தும் அழிவற்ற உயர்ந்த செல்வம் கல்விதான். மற்றவை எல்லாம் செல்வங்கள் ஆகா.

தாவரங்களுக்கு நல்ல ஊட்டச்சத்து கொடுத்து, அவைகளின் வளர்ச்சிக்கு இடையூறு விளைவிக்கும் களைகளைக் களையெடுத்து, சரியான தட்ப வெப்பம் (சீதோஷணம்) தந்து, குறிப்பிட்டக் காலத்தில் நல்ல விளைச்சலைப் பெற ஒரு விவசாயி பாடுபடுவதைப் போல், ஒரு குழந்தை நன்றாக கல்வி கற்க அதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து, கற்கும் வழிமுறைகளைக் கற்றுக்கொடுத்து, குழந்தைகள் வளர்ந்து அவர்களுக்குப் பிடித்த ஒரு பெரிய நிலையை அடைய **ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு பள்ளியும் அதன் ஆசிரியர்களும் உதவ வேண்டும்.**

ஒரு குழந்தைக்கு இலக்கியம் பிடிக்கும். மற்றொரு குழந்தைக்கு வரலாறு, புவியியல், கணிதம், இரசாயனம், இயற்பியல், உயரியல், கணினி, வணிகவியல், பொருளாதாரம் என்று ஒவ்வொன்று பிடிக்கும். ஆனால், அத்தனை படிப்புக்கும் பொதுவான திறன் ஒன்று தேவைப்படுகிறது. அதுதான் நினைவாற்றல் திறன்.

உயிர் வாழ ஒருவருக்குத் தண்ணீர் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு ஒருவர் நன்றாகப் படிப்பதற்கு நினைவாற்றல் முக்கியம்.

நல்ல நினைவாற்றல் பெற ஆர்வம், கவனம், புரிந்து படித்தல், ஐம்புலன்களையும் கற்றலில் பயன்படுத்துதல், முறையான தூக்கம் போன்ற திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். சில குழந்தைகளுக்கு இத்தகைய திறன்கள் பிறவியிலேயே நன்கு அமையப்பெற்றிருக்கும். அப்படி இயற்கையிலேயே இந்தத் திறன்கள் நன்கு அமையப்பெறாதவர்களுக்கு உங்கள் கையில் உள்ள **'வெற்றிக்கு வழி அமைக்கும் நினைவாற்றல் உத்திகள்'** என்ற இந்த அரிய கல்வியியல் பற்றிய புத்தகத்தைக் கொடுத்துள்ளேன். இது உங்கள் நினைவாற்றலை வளர்த்து, தன்னம்பிக்கையை ஊட்டி, ஏழு தலைமுறைக்கும் பயனளிக்க என் நல்வாழ்த்துக்கள்.

**வழி இதோ; செயல் உங்கள் கையில்.**

**வாழ்க! வளர்க!**

**நன்றியுடன்,**

**ஆசிரியர் பா. ஜான் லூயிஸ்.**

## சமர்ப்பணம்...

எனக்கு கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் மற்றும் என்னிடம் கல்விகற்ற அனைத்து மாணவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

## நன்றி...

இந்நூலில் விளக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திற்கும் மெருகேற்றி, ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் அந்த அத்தியாயத்தின் கருத்துக்களை இரத்தின சுருக்கமாக, கவிதையாக ஜொலிக்கவிட்ட என் முன்னாள் மாணவர் கவிஞர் பாக்கியவான் என்கிற **ஜெகன், அபுதாபி, ஐக்கிய அரபு அமீரகம் (U.A.E)** அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். மேலும், இந்நூலிற்கு அச்சுவடிவம் கொடுத்து மனமுவந்து வெளியிட்ட **வெற்றிக்கு வழி குழுமத்தைச்** சார்ந்த அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# அணிந்துரை . . .

"வினாடிவினா வேந்தர்"
பேராசிரியர் கோ. பாலகிருஷ்ணன்
முன்னாள் துணை முதல்வர்
புனித வளனார் கல்லூரி
திருச்சி.

வாசிப்பை நேசிக்கும் உங்களுக்கு ஒரு ரகசியத்தைச் சொல்லட்டுமா?

'நினைவாற்றல் வேந்தர்' — என் மதிப்புமிக்க மாணவன் – குருவை மிஞ்சிய சீடன் – அன்புத் தம்பி ஜான் லூயிஸ் வேர்வையில் உருவான இந்த நூல் வாசகர்களின் வெற்றிக்கு வேர் வைக்கும் என்பதில் ஐயமில்லை.

35 அத்தியாயங்கள் – 143 பக்கங்கள் நினைவாற்றல் உத்திகளை உங்கள் வாசல் கதவைத் தட்டி வெற்றிக்கு வழி காட்டுவதோடு அல்லாது, வெற்றிக்கு வலு சேர்க்கின்றன.

நூலின் நோக்கம் தொடங்கி, வாசகர்களின் கனவுகள் மெய்ப்பட வாழ்த்துக்கள் வரை அமைந்துள்ள பொருளடக்கம் **"Here is GOD'S PLENTY"** என எண்ண வைக்கின்றது.

உருவாவதற்கு பெற்றோர் காரணம் எனும் ஜான் (நூலாசிரியரை அப்படி அழைத்துத் தான் பழக்கம்!) அவர் உயிராவதற்குக் காரணமாய் இருந்த ஆசிரியர்களுக்கும் (அதில் நானும் ஒருவன்), தன்னை செம்மைப்படுத்திய மாணவர்களுக்கும் இந்நூலை சமர்ப்பணம் செய்திருப்பது அவரது உயரிய பண்பை பறைசாற்றும் சான்று.

கவிஞர் ஜெகனின் கவிதைகள் – மேற்கோள்கள் – ஒவ்வொரு அத்தியாயத்தின் அறிவுசார் அற்புதங்களை வெளிக்கொணரும் அலாவுதீனின் விளக்குகள்.

“ஜான் லூயிஸ் முறை” மறதி எனும் குறை தீர்க்கும் மாமருந்து. சுய பரிசோதனை பற்றிய கருத்துக்கள் ஜான் லூயிஸை இளம் சாக்கரடீஸாக நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

பாகுபலி பாகம்–2 பார்த்த நாம் சந்தேகங்களும், சங்கடங்களும் நான்கு பாகங்களாக இந்நூலில் காணலாம். சந்தேகங்களுக்கான காரணங்கள் – விளைவுகள் – தீர்வுகள் நூலாசிரியர் வழங்கி இருப்பது அவரது நுண்ணறிவை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.

எண்களுக்கென்று 12 அத்தியாயங்களை ஒதுக்கியிருப்பது திருக்குறள் 392 (நினைவுண்டா உங்களுக்கு?!) சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது.

அணிந்துரையிலேயே அத்தனை கருத்துக்களையும் நான் சொல்லிவிட்டால் நூலை நீங்கள் வாங்கமாட்டீர்கள்!

படத்தின் (பாடமல்ல!) முன்னோட்டம் இத்துடன் முடிந்தது. செங்கல்லை பளிங்கு கல்லாக்கும் வித்தையை ஜான் சொல்லித்தர தயார். அப்புறமென்ன சராசரி வாசகனும், வாசகியும் சாதனையாளர் ஆக வேண்டியது தானே?

இப்படிக்கு,

பேராசிரியர் கோ. பாலகிருஷ்ணன்

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | நோக்கம் | 11 |
| 2 | கற்றல் திறனின் நிலைகள் | 13 |
| 3 | சுயபரிசோதனை | 15 |
| 4 | நினைவகம் மாதிரி | 21 |
| 5 | பாடங்களை வகைப்படுத்துதல் | 29 |
| 6 | கான்கிரீட் வார்த்தைகள் | 32 |
| 7 | தொடர்பு படுத்துதல் | 43 |
| 8 | சந்தேகங்களும், சங்கடங்களும் [பாகம்-1] | 47 |
| 9 | அருவமான வார்த்தைகள் | 53 |
| 10 | சந்தேகங்களும், சங்கடங்களும் [பாகம்-2] | 61 |
| 11 | எண்களை வசப்படுத்துவது எப்படி | 67 |
| 12 | ஜான் லூயிஸ் முறை | 70 |
| 13 | எண்கள் 0 -9 | 73 |
| 14 | இரட்டை இலக்க எண்கள் | 76 |
| 15 | எண்கள் 10 - 19 | 81 |
| 16 | எண்கள் 20 - 29 | 84 |
| 17 | எண்கள் 30 - 39 | 87 |

| | | |
|---|---|---|
| 18 | எண்கள் 40 - 49 | 90 |
| 19 | எண்கள் 50 - 59 | 93 |
| 20 | எண்கள் 60 - 69 | 96 |
| 21 | எண்கள் 70 - 79 | 99 |
| 22 | எண்கள் 80 - 89 | 102 |
| 23 | எண்கள் 90 - 99 | 105 |
| 24 | எண்கள் 00 - 09 | 108 |
| 25 | சந்தேகங்களும், சங்கடங்களும் [பாகம்-3] | 111 |
| 26 | எண்கள் கொண்ட தகவல்களை நினைவில் கொள்க | 115 |
| 27 | மன வரைபடம் மாதிரி - ஓர் அறிமுகம் | 118 |
| 28 | மன வரைபடத்தின் அடிப்படை கூறுகள் | 123 |
| 29 | மனவரைபடம் தயாரித்தல் | 126 |
| 30 | மன வரைபடத்தின் பயன்கள் | 128 |
| 31 | மன வரைபடம் தயாரித்தல் - எடுத்துக்காட்டு | 129 |
| 32 | மீள்பார்வை | 134 |
| 33 | சந்தேகங்களும் சங்கடங்களும் [பாகம்-4] | 137 |
| 34 | நினைவுத் திறனும் தூக்கமும் | 140 |
| 35 | கனவுகள் மெய்ப்பட வாழ்த்துக்கள் | 143 |